# தென்னையில் ஒருங்கிணைந்த பயிர் பாதுகாப்பு பயிற்சி

By DIN | Published on : 25th November 2017 09:44 AM | அ+ அ அ- |

நீடாமங்கலம் வேளாண்மை அறிவியல் நிலையத்தின் சார்பில், தென்னையில் ஒருங்கிணைந்த பயிர்ப் பாதுகாப்பு பயிற்சியாக காண்டாமிருக வண்டைக் கட்டுப்படுத்துவது குறித்து செயல்விளக்கம் திருவாரூர் மாவட்டம், கூப்பாச்சிக்கோட்டையில் அண்மையில் நடைபெற்றது.

வேளாண்மை அறிவியல் நிலைய பூச்சியியல் துறை உதவிப் பேராசிரியர் ராஜா.ரமேஷ் பயிற்சியளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

தென்னைய பல்வேறு வகையான பூச்சிகள் மற்றும் நோய்களின் தாக்குதலுக்கு உள்ளாகி தேங்காய் உற்பத்தி பாதிக்கப்படுகிறது. மேலும், குரும்பைகள் கொட்டுவதற்கு பூச்சிகளும் ஒரு முக்கிய காரணியாக விளங்குகிறது. எனவே, ஒருங்கிணைந்த முறையில் தென்னையைப் பாதுகாப்பது அவசியமாகும்.

குறிப்பாக, காண்டாமிருக வண்டானது அதிக அளவில் சேதத்தை உண்டாக்குகின்றன. எனவே அதைக் கட்டுப்படுத்துவது மிக மிக அவசியமானதாகும். வளர்ந்த வண்டு மட்டுமே தென்னையை தாக்கும் இதன் புழுவானது சாணம் உள்ளிட்ட குப்பைகளில் முட்டையிட்டு வளர்ந்து பின்பு வளர்ந்த வண்டு மட்டுமே தென்னை மரத்தைத் தாக்கி மகசூல் இழப்பை ஏற்படுத்துகிறது.

இவற்றைக் கட்டுப்படுத்த தோப்புகளில் குப்பை, சாணம் ஆகியவைகளை குவித்துவைக்காமல், துப்புரவாக வைத்து, எருக்குழிகளை வெட்டி மண்ணால் மூடி வைக்க வேணடும். எருக்குழியில் வளர்ந்து வரும் புழுக்களை அழிக்க பச்சை மஸ்கார்டைன் என்ற பூஞ்சாணம் தெளித்து அழிக்க வேண்டும்.

தென்னையில் வண்டு துளைத்த துவாரங்களின் வழியே நீண்ட கம்பியை உட்செலுத்தி உள்ளே உள்ள வண்டினை கம்பியால் குத்தி வெளியே எடுக்கலாம். இரண்டாம் மற்றும் மூன்றாம் இலை இடுக்குகளில் வேப்பங்கொட்டை தூள் மற்றும் மணல் (1:1) கலவையை இளம் மரம் ஒன்றுக்கு 150 கிராம் என்ற அளவில் அடிக்குருத்திலிருந்து மூன்றாவது குருத்தின் வழியாக இடவேண்டும், மின் விளக்குப்பொறிகளை வைத்து அதன் வெளிச்சத்தில் கீழே விழுகிற ஆண், பெண் வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம்,.

ஆமணக்கு பிண்ணாக்கு 2.5 கிலோ இதனுடன் ஈஸ்ட் 5 கிராம் அல்லது அசிடிக் அமிலம் 5 மிலி கலவையில் நீளவாக்கில் வெட்டப்பட்ட இளம் இலை மட்டைத் துண்டுகளை நனைத்து ஏக்கருக்கு 30 வீதம் தோப்பில் வைத்து வண்டுகளை கவர்ந்து அழிக்கலாம். அல்லது கவர்ச்சிப் பொறிகளை தென்னந்தோப்பில் வைத்து வளர்ந்த காண்டாமிருக வண்டுகளையும் கவர்ந்து அழிக்கலாம் என்றார்.

பின்னர், கவர்ச்சிப் பொறிகளை தென்னந்தோப்பில் வைப்பது தொடர்பாக மேற்கொள்ள வேண்டிய வழிமுறைகள் குறித்து விவசாயிகளுக்கு செயல்விளக்கமளிக்கப்பட்டது.